# 12 வது ஆண்டுப் பூர்த்தி விழா



துன்பம் தீர்க்கும்
கலியுக தெய்வம்
நாகபூசனி அம்மன்



ஸ்ரீ காயத்ரி மந்திரம்

ஓம்! பூர்புவ: ஸ்வஹா:!
தத் ஸவிதுர் வரேண்யம்!
பர்கோ தேவஸ்ய தீமஹி!
தியோ யோந:. ப்ரசோதயாத்!

# 02வது ஆண்டுப் பூர்த்தி
# விழா

துன்பம் தீர்க்கும்
கலியுக தெய்வம் நாகபூசனி
அம்மன்

ஓம் சக்தி



## மூல மந்திரம்

ஓம் சக்தியே ! நாக தாயே !
ஓம் சக்தியே ! பத்திரகாளித் தாயே !
ஓம் சக்தியே ! கலியுக அவதாரமே !
ஓம் சக்தியே ! ஓம் மகா கணபதியே !
ஓம் சக்தியே ! ஞானகணேஸ்வரித் தாயே !



## கணபதி துணை

*ஆதி முதல்வனே கணபதியே*
*அனைத்து வினைகளையும் தீர்ப்பவனே (ஆதி முதல்வனே)*
*எட்டு திசைகளிலும் உந்தன் நாமமே*
*எடுத்திடும் போதெல்லாம் பரமானந்தமே*
*வேழமுகத்தோனே ஞானப்பெருமானே*
*ஞானப் பிரம சிவ பாலகனே*
*சரணம் சரணம் விநாயகனே*
*சரணம் சரணம் விநாயகனே (ஆதி முதல்வனே)*

## விநாயகர் ஸ்தோத்திரம்

விநாயகன் என்றாலே வினைகள் மாறும் மாறும்
விநாயகன் என்றாலே வினைகள் தீரும் வினைகள் தீரும்.
ஞான நிலை தருவான் அவன் புத்தி விநாயகனாம்
யோக நிலை தருவான் அவன் முக்தி விநாயகனாம் (ஞான)
இச்சையினைத் தீர்ப்பான் மலையுச்சி விநாயகனாம்
நற்செயலைக் காப்பான் எழில் கட்சி விநாயகனாம்
வல்லமையை அளிப்பான் வல்லபை விநாயகனாம்
நல்லதிலே களிப்பான் அவன் நடன விநாயகனாம்
சக்தியினைக் கொடுப்பான் நவசக்தி விநாயகனாம்
பக்தியினைக் கொடுப்பான் அவன் சித்தி விநாயகனாம்
பழத்தினையே வென்றான் .....
எங்கள் விநாயகனாம் வினை தீர்க்கும் விநாயகனாம்
தங்க விநாயகனாம் எமைத் தாங்கும் விநாயகனாம்

## *முக்கண்ணன் மகனே*

முந்தி முந்தி விநாயகரே
முக்கண்ணார் தன் மகனே
கந்தனுக்கு முன் பிறந்த
கணபதி வாருமையா (முந்தி)
பானை வயிற்றுக் கணபதியே
பாதுகாக்க வேணுமையா
ஆனை முகம் கொண்டவரே
ஆதரிக்க வேணுமையா
வினை தீர்க்கும் வித்தகரே
வேண்டும் வரமும் தாருமையா
நினைவெல்லாம் நீயே ஐயா
நித்தமுமே வந்தருள்வாய் (முந்தி)
கன்னிமூலக் கணபதியே
கருணை கொண்டே வந்திடுவாய்
கன்னி மார்களும் மலையேற
கற்பகமே முன் நடவாய்
சன்னிதானம் அடைந்திடுவே
சடுதியில் நீயும் வந்திடுவாய்
பொன் ஐயன்முகம் பார்க்க
எனக்கும் துணையாய் வாருமையா (முந்தி)

## முன்னுரை

*"அம்மாவின் அருள் கண்கள் — ஒரு*
*முறை பார்த்தால் போதும் நோய்*
*நொடிகள் துன்பங்கள் கலைந்தோடும்*
*கர்ம வினைகள் தீரும்*
*சர்வ மங்களம் கூடும்".*

இக்கூற்றிற்கமைய யாழ்ப்பாணத்திற்கு அருகே உள்ள சப்த தீவுகளில் நடுநாயகமாகத் திகழ்வது நயினா தீவாகும். இத்தீவில் அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடத்தில் நாக ராஜேஸ்வரி, நாகேஸ்வரி, நாகபூஷணி என்ற திருநாமங்களுடன் அம்பிகை அருளாட்சி செய்கின்றாள். இப்புவனேஸ்வரி பீடத்தின் அம்பிகைக்குப் பூக்கொண்டு நாகத்தால் பூசிக்கப்பட்டதால் நாகபூஷணி, நாகேஸ்வரி என்ற திருநாமங்கள் வழங்கப்படலாயிற்று. இந்நாகபூஷணி அம்மனின் அருள்வாக்கு பெற்றவர்களின் வணக்கத்திற்குரிய ஞான கணேஸ்வரி அம்மையாரும் ஒருவர் ஆவார்.

ஆத்மீக அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் உலக மானிடர்களின் புத்துயிரூட்டும் வகையில் எங்கள் அம்மையார் தனது கருணை உள்ளம் கொண்ட அருள் வாக்கினால் கடந்த சில காலங்களாக மானிடர்களின் நோய்களையும் துன்பங்களையும் நீக்கி உள்ளத்தையும் உடலையும் தூய்மையாக்கி அருள்புரிந்து வருகிறார். அம்மாவின் அருளைப் பெற்ற அடியேன் என்ற தோரணையில் அடியார்களுக்கு கூறிவைக்க விரும்புவது யாதெனில் ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் கடாட்ஷத்தைப் பெறக் கடும் சோதனைகளும் அளவற்ற துன்பங்களும் நேரிடின் மனந்தளராமல் அம்மாவின் திருப்பாதங்களில் சரணாகதி அடைந்து புத்துயிரடையுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவது ஆண்டு பூர்த்தி விழாவைக் கொண்டாடும் இன்றைய தினத்தன்று பக்தர்கள் தம் பக்திக் கரங்களினாலேயே பாலால் அபிஷேகம் செய்து கரும வினையை நீக்கி அம்மாவின் ஆசியைப் பெற்றுச் சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மனம் திறந்து கூறுவது யாதெனில் அம்மாவின் வழி முறைகளையும் ஒழுக்க நெறிகளையும் கடைப்பிடித்தல் அவசியம். எங்கள் கருணை உள்ளம் கொண்ட அம்மையாரின் கிருபா கடாட்ஷத்தை எல்லோருக்கும் அருள் புரியப் பிரார்த்திக்கிறேன்.

"எனக் கென்றோர் தனிவரம் நான் கேட்கவில்லை
என் இனத்தார் வாழ்வென்றே கருதவில்லை
உனக் கெல்லா உயிர்களுமே சொந்த மென்ற
உண்மையை நான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங் கொண்டு தீங்கிளைக்கும் தீயர் தாமும்
சீலமுற வேண்டு மென்றே வேண்டுகின்றேன்
தனக் கொருவர் ஒப்பில்லாத் தாயே இந்த
தரணி தனில் சாந்தியையே தருவாய் நீயே!"

**க. தனபாலசிங்கம்**
*(ஆலோசகர்), தர்மகர்த்தா சபை*
*நாகபூஷணி அம்மன் ஆலயம்*

நாக கன்னி துதி

அகிலத்தை ஆள் பவளே
நாக கன்னித் தாயே
ஆறுதலைத் தாவனம்மா
நாக கன்னித் தாயே
இனிய குணம் முடையாய்
நாக கன்னித் தாயே
ஈடினை அற்றவள் நீ
நாக கன்னித் தாயே
உன்னையே நம்பி வந்தோம்
நாக கன்னித் தாயே
ஊக்கத்தைத் தாவேனம்மா
நாக கன்னித் தாயே
எல்லாம் அறிந்தவள் நீ
நாக கன்னித் தாயே
ஏற்றம் அளித்திடம்மா
நாக கன்னித் தாயே
ஐயம் ஒளிப்பவள் நீ
நாக கன்னித் தாயே
ஐம்புலனும் ஆள்பவள் நீ
நாக கன்னித் தாயே
ஒளி வடிவானவள் நீ
நாக கன்னித் தாயே
ஓடியே வாவனம்மா
நாக கன்னித் தாயே
விகாரையில் கோவில் கொண்டாய்
நாக கன்னித் தாயே
நல்லருளைத் தந்திடம்மா
நாக கன்னித் தாயே
கடலோரம் அமர்ந்திருந்து
நாக கன்னித் தாயே
காத்தருள் புரிவாயம்மா
நாக கன்னித் தாயே
பாலன் கதறுகின்றேன்
நாக கன்னித் தாயே
பறந்தோடி வாவனம்மா
நாக கன்னித் தாயே
குழந்தை கலங்குகின்றேன்
நாக கன்னித் தாயே
குதித்தோடி வாவனம்மா
நாக கன்னித் தாயே

கட்டிருந்தால் கட்டறுத்து
நாக கன்னித் தாயே
கலை கொண்டு வாவனம்மா
நாக கன்னித் தாயே
தடை இருந்தால் தடை அறுத்து
நாக கன்னித் தாயே
பெரும் கலை கொண்டு வாவனம்மா
நாக கன்னித் தாயே
சீறிக் கலையெடம்மா
நாக கன்னித் தாயே
சிவ கலையாய் வாவனம்மா
நாக கன்னித் தாயே
மூசிக் கலையெடம்மா
நாக கன்னித் தாயே
முழுக் கலையாய் வாவனம்மா
நாக கன்னித் தாயே
பத்தினியைக் கைப்பிடித்து
நாக கன்னித் தாயே
பறந்தோடி வாவனம்மா
நாக கன்னித் தாயே
வேப்பிலையைக் கைபிடித்து
நாக கன்னித் தாயே
வீசி விளையாடனம்மா
நாக கன்னித் தாயே
கும்பத் தழகியரே
நாக கன்னித் தாயே
குதித்தோடி வாவனம்மா
நாக கன்னித் தாயே
பாம்பணைமேல் பள்ளி கொண்டு
நாக கன்னித் தாயே
பறந்தோடி வாவனம்மா
நாக கன்னித் தாயே
அகிலத்தை ஆழ்பவளே
நாக கன்னித் தாயே
அண்டமெல்லாம் பூத்தவளே
நாக கன்னித் தாயே
பால் குடித்துப் பாடவைத்தாய்
நாக கன்னித் தாயே
கோயிலெல்லாம் நாடவைத்தாய்
நாக கன்னித் தாயே

சாம்பிராணி வாசனையாம்
நாக கன்னித் தாயே
சாந்தமணம் கொள்ளுதம்மா
நாக கன்னித் தாயே
கற்பூர வாசனையாம்
நாக கன்னித் தாயே
சாந்தமணம் கொள்ளுதம்மா
நாக கன்னித் தாயே
கற்பூர வாசனையாம்
நாக கன்னித் தாயே
கமறி மணம் கொள்ளுதம்மா
நாக கன்னித் தாயே
சந்தனப் பலகையிலே
நாக கன்னித் தாயே
சதிராடி வந்தவளே
நாக கன்னித் தாயே
குங்குமப் பலகையிலே
நாக கன்னித் தாயே
குதித்தோடி வந்தவளே
நாக கன்னித் தாயே
கும்பத்து அழகியரே
நாக கன்னித் தாயே
குதித்தோடி வாவனம்மா
நாக கன்னித் தாயே
செம்பவள வாய்திறந்து
நாக கன்னித் தாயே
செய்திகளைச் சொல்லேனம்மா
நாக கன்னித் தாயே
கும்பிட்டேன் தெண்ட லிட்டேன்
நாக கன்னித் தாயே
குதித்தோடி வாவனம்மா
நாக கன்னித் தாயே
செம்பவள வாய் திறந்து
நாக கன்னித் தாயே
செய்திகளைச் சொல்லேனம்மா
நாக கன்னித் தாயே
கும்பிட்டேன் தெண்டலிட்டேன்
நாக கன்னித் தாயே
குதித்தோடி வாவனம்மா
நாக கன்னித் தாயே

வருந்தி அழைக்கின்றேன்
நாக கன்னித் தாயே
வந்து பதில் கூறேனம்மா
நாக கன்னித் தாயே
குழந்தை நான் வருந்துகின்றேன்
நாக கன்னித் தாயே
கூக்குரல் தான் கேட்கலையோ
நாக கண்ணித் தாயே
பாலன் கதறுகிறேன்
நாக கன்னித் தாயே
பக்கத்திலும் கேட்கலையோ
நாக கன்னித் தாயே
பல்லைப் படைத்தவர்கள்
நாக கன்னித் தாயே
பரிகாசம் பண்ணுகிறோம்
நாக கன்னித் தாயே
நாவைப் படைத்தவர்கள்
நாக கன்னித் தாயே
நையாண்டி பண்ணுகிறோம்
நாக கன்னித் தாயே
வேப்பிலையை நீ எடுத்தோ
நாக கன்னித் தாயே
வேல் வினையைப் போக்கிடுவாய்
நாக கன்னித் தாயே
வெண்ணீறு நீ போட்டால்
நாக கன்னித் தாயே
கண்ணீணு போய் விடுமாம்
நாக கன்னித் தாயே
கட்டித்தான் வைத்தாலும்
நாக கன்னித் தாயே
பூட்டித்தான் வைத்தாலும்
நாக கன்னித் தாயே
பூட்டுடைத்தோ வந்திடம்மா
நாக கன்னித் தாயே
இரும்போ தான் உன்மனது
நாக கன்னித் தாயே
இரங்காதோ எள்ளளவும்
நாக கன்னித் தாயே
கல்லோ தான் உன் மனது
நாக கன்னித் தாயே
கனியாதோ எள்ளளவும்

நாக கன்னித் தாயே
நெற்றியிலே குங்குமம் தான்
நாக கன்னித் தாயே
நிலைத்திடவே வேண்டுகிறேன்
நாக கன்னித் தாயே-
மாங்கல்ய வாழ்வு தான்
நாக கன்னித் தாயே
மகிழ்வுடனே தந்தவளே
நாக கன்னித் தாயே
உண்டென்பவர் வாசலெல்லாம்
நாக கன்னித் தாயே
ஊடுருவிச் சென்ற சக்தி
நாக கன்னித் தாயே
பாடலைத்தான் வீடு எல்லாம்
நாக கன்னித் தாயே
பாம்பாய் நுழைந்த சக்தி
நாக கன்னித் தாயே
இலங்கை எனும் தீவினிலே
நாக கன்னித் தாயே
நல்ல நாகம் வடிவெடுத்தாய்
நாக கன்னித் தாயே
நாலு சுற்றும் சமுத்திரங்கள்
நாக கன்னித் தாயே
நடுவினிலே சிம்மாசனம்
நாக கன்னித் தாயே
நாடோ அழியுதம்மா
நாக கன்னித் தாயே
தேசம் அழியுதம்மா
நாக கன்னித் தாயே
பத்துத் தலை நாகம் அம்மா
நாக கன்னித் தாயே
படமெடுத்து ஆடுதம்மா
நாக கன்னித் தாயே
சரணம் சரணம் அம்மா
நாக கன்னித் தாயே
சரணம் என்றால் மரணம் இல்லை
நாக கன்னித் தாயே
சரணம் சரணம் அம்மா
நாக கன்னித் தாயே
பொற்பாதம் சரணம் அம்மா
நாக கன்னித் தாயே

ஆதிசிவன் நாயகியே
அம்மா பரமேஸ்வரியே
ஈசனது பாதிநீயே எம்மையாளும்
தேவி நீயே
நாதியற்று நாங்கள் இங்கு
பாடும் பாடல் கேட்டு நீ
ஓடி வந்து காட்சி தந்து
எம்மை இங்கு ஆதரி (ஆதி சிவன்)

அபிராமி சங்கரி அகிலலோக நாயகி
உமாதே உத்தமி
உலகை ஆளும் தேவி நீ
அமாவாசை தன்னிலே
அம்புலியைக் காட்டி நீ
இமலானின் புத்திரி
ஈடில்லாத சோதி நீ (ஆதி சிவன்)

கோணேஸ்வரத்திலே கொலுவானாள்மாதுமை
கேதீஸ்வரத்திலே கோதையான கௌரி நீ
வைத்தீஸ்வரத்திலே வனிதை தையல் நாயகி
நகுலேஸ்வரத்திலே நங்கை நகுலாம்பிகை
ஓம் சக்தி ஓம் ஓம் //
ஓம் சக்தி ஓம் ஓம் //
ஓம் சக்தி ஓம் ஓம் //
ஓம் சக்தி ஓம் ஓம் //

வருவாய் வருவாய் வருவாயம்மா
திரு யுருவாய் வருவாயம்மா (வருவாய்)

இருளை நீக்கிட வருவாயம்மா – மன
இருளை நீக்கிட வருவாயம்மா
உந்தன் அருளைப் பொழிந்திடு
தாயே அம்மா
உந்தன் அருளைப் பொழிந்திடு
தாயே அம்மா (வருவாய்)
கலைவாணி கருமாரி காமாட்சி நீ
மஹாலக்சுமி மாதங்கி மீனாட்சி நீ
வரலட்சுமி வாதாயி விசாலாட்சி நீயே
உலகாளும் மாயே சிவகாமி தாயே
அம்மா அம்மா அம்மா (வருவாய்)

## துர்க்கா துதி

சிங்கத்திலே வந்திடுவாய் துர்க்கை தாயே
எங்கள் தீ வினைகள் தீர்த்திடுவாய் துர்க்கை தாயே
சங்கரனின் பங்கிருப்பாய் துர்க்கை தாயே எங்கள்
சஞ்சலங்கள் தீர்த்திடுவாய் துர்கை தாயே

வாளா மகிடன் தலை துர்க்கை தாயே – நீ
வாளால் துணிந்து வென்றாய் துர்க்கை தாயே
நீளாழி மாயனுக்குத் துர்க்கை தாயே – நீ
நிறைவான சோதரியே துர்க்கை தாயே

செவ்வான மேனியளே துர்க்கை தாயே – நீ
தேச விளக்காகி நிற்பாய் துர்க்கை தாயே
ஒவ்வாத கொடியவரை துர்க்கை தாயே – நீ
ஒடுங்கியருள் செய்திடுவாய் துர்க்கை தாயே

கமல முகத்தழகி துர்க்கை தாயே – திருக்
காலில் சிலம்பழகி துர்க்கை தாயே
நமசி வாய நடனி துர்க்கை தாயே
சிவஞான சுமங்கலியே துர்க்கை தாயே

எமக்கருள் செய்திடுவாய் துர்க்கை தாயே
வரும் எமபயம் தீர்த்திடுவாய் துர்க்கை தாயே
தமக்கும் பாவம் தீர்க்கும் துர்க்கை தாயே
உன் துணையடி தந்திடம்மா துர்க்கை தாயே

## நாக அம்மன் பாடல்

அலை குலய தலை குலய தாயே தாயே
நீயும் ஆடிவர வேணும் அம்மா தாயே தாயே
பாம்பாலே தம்மாடம் தாயே தாயே
அம்மா படித்தாலே கோபுரமாம் தாயே தாயே
ஐந்து தலை நாகம் அம்மா தாயே தாயே
கொஞ்சி விளையாடுதம்மா தாயே தாயே
பத்து தலை நாகம் அம்மா தாயே தாயே
அம்மா மதி கிடக்கும் பஞ்சனையில் தாயே தாயே
அம்மா சீறிக் கலை எடம்மா தாயே தாயே
அம்மா சிவகலையாய் வாவனம்மா தாயே தாயே
அம்மா மூசிக் கலையெடம்மா தாயே தாயே
அம்மா முழுகலையாய் வாவனம்மா தாயே தாயே
அம்மா கட்டிருந்தால் கட்டறுத்து தாயே தாயே

நீயும் பெரும் கலை கொண்டு வாவனம்மா தாயே தாயே
நீயும் நிறை கலையில் வாவனம்மா தாயே தாயே
பாலன் கதறுகிறேன் தாயே தாயே
அம்மா பத்தினியே வாவனம்மா தாயே தாயே
குழந்தை கலங்குகிறேன் தாயே தாயே
குல விளக்கே வாவனம்மா தாயே தாயே
ஓடி வந்த பாம்மை எல்லாம் தாயே தாயே
ஒரு காலில் பூண்டாயம்மா தாயே தாயே
அம்மா அங்கிருந்து பாம்பை எல்லாம் தாயே தாயே
ஆபரணமாய் பூண்டாயம்மா தாயே தாயே
ஒரு தலை நாகம் அம்மா தாயே தாயே
ஓடி விளையாடும் அம்மா தாயே தாயே
இரு தலை நாகம் அம்மா தாயே தாயே
இருந்து விளையாடும் அம்மா தாயே தாயே
ஐந்து தலை நாகம் அம்மா தாயே தாயே
அம்மா அருகிருந்து ஆடும் அம்மா தாயே தாயே
அம்மா பத்தினியை கைபிடித்து தாயே தாயே
அம்மா பறந்து விளையாடன் அம்மா தாயே தாயே
அம்மா அம்மா வேப்பிலையை கைபிடித்து தாயே தாயே
நீயும் வீசி விளையாடன் அம்மா
கத்தி போல் வேப்பிலையை தாயே தாயே
அம்மா கதற விட்டாய் லோகம் எல்லாம் தாயே தாயே
ஈட்டி போல் வேப்பிலையை தாயே தாயே
அம்மா இளுத்து எறிவாய் லோகம் எல்லாம் தாயே தாயே
நீறள்ளி வீசிடம்மா தாயே தாயே
நின்ற வினை போய் விலகும் தாயே தாயே
அம்மா மலையாள தேசம் எல்லாம் தாயே தாயே
அம்மா விளையாடப் பெண் பிறந்தாய் தாயே தாயே
அம்மா வினையாலே தவித்தோம் அம்மா தாயே தாயே
அம்மா வினையகற்றி வையன் அம்மா தாயே தாயே
அம்மா நோயால் தவித்தோம் அம்மா தாயே தாயே
அம்மா நோய் அகற்றி வைத்தாய் அம்மா தாயே தாயே
அம்மா உன்சிலம்பு பிறந்ததம்மா தாயே தாயே
அம்மா சிவலிங்கப் பாறையிலே தாயே தாயே
அம்மா உன் பிரம்பு பிறந்ததம்மா தாயே தாயே
அம்மா பிச்சாண்டி சந்நிதியில் தாயே தாயே
அம்மா உடுக்கை பிறந்ததம்மா தாயே தாயே
அம்மா உத்ராட்ச பூமியிலே தாயே தாயே
அம்மா பளிங்குமா மண்டபத்தில் தாயே தாயே
அம்மா வேம்பு பிறந்ததம்மா தாயே தாயே

அம்மா விஜய நகர பட்டணத்தில் தாயே தாயே
அம்மா ஆற்று மணல் எடுத்துத் தாயே தாயே
அம்மா அரணரை உண்டு செய்தோம் தாயே தாயே
அம்மா சேற்று மணல் எடுத்து தாயே தாயே
அம்மா சிவனரை உண்டு செய்தாய் தாயே தாயே
அம்மா பரிகாசம் செய்தவரை தாயே தாயே
அம்மா பழிவாங்கும் தெய்வம் அம்மா தாயே தாயே

(அலை குலய)

(1) உடுக்கை பம்பை ஓசை கேட்டால்
ஓடிவரும் மகமாயி
ஊழ்வினைகள் மாய்த்திடுவாள்
வேற்காட்டுக் கருமாரி
வேத முனீஸ்வரன் மேனியிலே
ஒரு பாதி கொண்டாலே ஈஸ்வரி
மேதினி போற்றிடும் மாதவர்
சோதரி நாதத்தின் வடிவே கருமாரி
ஞான யோக கருமாரி
மௌனசக்தி சுகுமாரி (உடுக்கை)
உத்தினில் வந்தாள் கருமாரி
கரு நாகமாகவே உருமாரி
பக்தர் ஊற்றும் பாலை குடித்து
பரிவுடன் அருள்வாள் கருமாரி
சித்திக்கும் தேவியின் நாமத்தைச்
சொன்னால் சித்தியும் தருவாள் திரிசூலி
சித்தி விநாயகன் சிங்கார வேலன்
பணிந்திடும் அன்னை கருமாரி
ஞான மோக கருமாரி
மௌனசக்தி சுகுமாரி (உடுக்கை)

சர்ம்பல் தந்து நோய்களை தீர்ப்பாள்
சாம்பவி சங்கரி கருமாரி
வேம்புத் தேரில் காட்சியும் தந்து
வேண்டும் வரம் தரும் கருமாரி
ஓங்கார கோஷத்தில் மயங்கிடுவாளே
சிங்காரத் தாயவள் கருமாரி
ஓம், ஓம், ஓம், ஓம், ஓம்
சிங்கத்தின் மீது பவனியும் வந்து சிந்தை
கவர்வாள் மாகாளி (உடுக்கை)

(2) நாகமாக உருமாரி வந்தது ஒரு ஆத்தா
நாகமணி ஊஞ்சலிலே ஆடிவரும் ஆத்தா
நாதர் முடிமேலிருக்கும் நாகமாரி ஆத்தா
நாற்கவியும் புனைந்திடுவாள் நாகவல்லி ஆத்தா
வேதங்களும் போற்றிநிற்கும் வேதவல்லி ஆத்தா
மகுடி நாதத்திலே மயங்கிடுவாள் நாகதேவி ஆத்தா
நாகாத்தாள் எங்கள் நாகாத்தாள்
நாகாத்தாள் எங்கள் நாகாத்தாள்
(நாகமாக)

ஓங்கார படம் எடுத்து ஆடிவரும் ஆத்தா
பாம்பாக பால்குடித்து பவனி வரும் ஆத்தா
மாங்காடு காமாட்சி கூந்தலிலே ஆத்தா
சிங்கார காட்சிதரும் நாகமணி ஆத்தா
நாகாத்தாள் எங்கள் நாகாத்தாள்
நாகாத்தாள் எங்கள் நாகாத்தாள்

சித்திரை மாதம் பௌணர்மி இரவில்
புற்றிலிருந்து புறப்படுவாள்
பத்தினி பெண்கள் பால் பழம் பன்னீர்
கொண்டு படைத்தால் இன்பம் கொண்டிடுவாள்
புற்றிலிருந்து புவனம் யாவையும்
காத்திடும் அன்னை நாகாத்தா
பக்தியுடன் நாம் அழைத்து விட்டாலே
படம் எடுத்தருள்வாள் நாகாத்தாள்
நாகாத்தாள் எங்கள் நாகாத்தாள்
நாகாத்தாள் எங்கள் நாகாத்தாள்

(3) I கருணைக் கண் பாரம்மா
கதி எமக்கு யாரம்மா
தருணம் வந்து ஆளம்மா
எம் தாயும் நீ அம்மா

II இருள் போன்ற வாழ்வினிலே
உழலுகிறோம் நாம் அம்மா
ஏழை முகம் பாரம்மா
எம் கவலை தீரம்மா

III பெற்றவளும் நீயம்மா
பெருமை தரும் தாயம்மா
உற்றார் துணை உறவினர் இல்லை
எமை உணர்ந்து காத்திடம்மா

IV நோயில்லாத வாழ்வு தன்னை
எமக்கருள வேண்டுமம்மா
நாம் செய்த பிழைகளை எல்லாம்
பொறுத்தருள வேண்டுமம்மா

V வஞ்சகரின் மனதை எல்லாம்
மாற்றிவிட வாருமம்மா
காளி மகமாயி நீயே
எமை உணர்ந்து காத்திடம்மா

VI பொய்யை நீக்கி மெய்யை
போற்றும் உத்தமியே நீயம்மா
கள்ளமில்லா மனதை எல்லாம்
காத்தருள வேண்டுமம்மா

VII நாகமாக வடிவெடுத்தாய் தாயே நீயம்மா
நாகபூஷணி தாயே எமையுணர்ந்து காத்திடம்மா
தாயே மூகாம்பிகையே சரண்புகுந்து வாழ்வோமே
ஆதிபராசக்தி தாயே துர்க்கை எமை காத்திடம்மா

VIII தஞ்சம் என்று வந்து விட்டோம் அருள்புரிந்து
எம்மை ஆளம்மா
சங்கரியே ஞானகணேஸ்வரியே மங்களம்
அருள் ஈஸ்வரியே.

(4) வருவாய் வருவாய் வருவாய் அம்மா
திருவே உருவாய் வருவாய் அம்மா
இருளை நீக்கிட வருவாய் அம்மா
உந்தன் அருளைப் பொலிந்திடு தாயே அம்மா

கல்யாணி கருமாரி காமாட்சி நீயே
மகாலக்ஷ்மி மாதங்கி மீனாட்சி நீயே
வரலட்சுமி வாதாஹி விசாலாட்சி நீயே
உலகாளும் தாயே ப்ரசாந்தி தாயே

(5) அகிலமெல்லாம் நிறைந்த அகிலாண்ட ஈஸ்வரியே
புவனத்தை ஆளுகின்ற புவனேஸ்வரி தாயே
கற்பூர நாயகியே அம்பிகையே உன்னை
கணமென்று நம்பிவந்தால் எம்துயர் தீராதோ

ஜோதியாய் நீ இருந்து ஒளிகாட்ட வேண்டுமம்மா
எண்ணமெல்லாம் உந்தன் நினைவாக வேண்டுமம்மா
செம்பவள நாயகியே அம்பிகையே உன்னை
கணம் என்று நம்பி வந்தால் அபயம் தாராயோ

திரிபுரம் எரித்தவனின் ஒருபுறம் ஆனவளே
நெற்றியில் குங்குமம் நீ நினைத்திட வைப்பாயே
தங்கச் சிலம் பொலிக்க தாண்டவம் ஆடி நின்று
நடராஜப் பெருமானை மகிழ்ந்திட வைத்தவளே

நான்முகன் நாயகியாய் கலைவாணி ஆனவளே
கல்வியில் மென்மேலும் சிறந்திட வைப்பாளே
வாணிசரஸ்வதியாய் வெள்ளைத் தாமரையில்
அமர்த்திருந்து வீணை இசை பொலிந்திடுவாய் நீ

நாகம்மாள் கோவிலிலே அன்னையாக வீற்றிருப்பாள்
ராகு கால பூஜை வேளை எம்முடன் கலந்திருப்பாய்
பாலெடுத்து வார்த்து வந்தால் வாழ்வெடுத்து தருவாயே
அம்பிகையே உன்னை எப்போதும் நினைத்திருப்போம்
(அகில)

(6) தோற்றாலும் ஜெயித்தாலும் உன்னையே நினைத்திருப்போம்
இடர் வந்த வேளையிலே தாயே உனை நினைப்போம்
கண்ணீரை துடைத்து எம்மை காத்திட வருவாயே
காலமெல்லாம் உந்தன் பாதத்தில் கண்புகுந்தோம்

ஐந்து தலை நாகமாக வடிவெடுப்பாய் நீயே
ஞான கணேஸ்வரி என்னும் அன்னையாக வீற்றிருப்பாய்
உன்பாதம் சரணடைந்தால் கேட்கும் வரம் தருவாயே
நாக பூஷணி அம்மா எமை இரங்கி காத்திடம்மா

(7) நாகம்மாள் வருகிறாள் நயினை
நாகம்மாள் வருகின்றாள்
உடுக்கை ஒலிகேட்டு ஆடிஆடியே
நாகம்மாள் வருகின்றாள்
பஞ்சம் பசியினைப் போக்கிடவே எங்கள்
நாகம்மாள் வருகின்றாள்
ஊக்கத்தைக் கொண்டு உயிரைக் காத்திட
நாகம்மாள் வருகின்றாள்
பள்ளிச் சிறுவர்க்கு அறிவைக் கொடுக்கவே
நாகம்மாள் வருகின்றாள்
பெருமையும் புகழையும் தந்திடவே எங்கள்
நாகம்மாள் வருகின்றாள்

எல்லை இல்லாக் கருணை கொண்ட எங்கள்
அன்னை நாகம்மாள் வருகின்றாள்
அலறும் அன்புப் பக்தர் கஷ்டத்தைப் போக்கிட
நாகம்மாள் வருகின்றாள்
கோடி நலம் தந்து குறைகளைத் தீர்த்திட
நாகம்மாள் வருகின்றாள்
கவலையில்லாத வாழ்வினைத் தந்திட
நாகம்மாள் வருகின்றாள்
வஞ்சகரின் மனதை மாற்றிடவே
நாகம்மாள் வருகின்றாள்
பொய்யை நீக்கி எம்மைப் போற்றிடவே
எங்கள் நாகம்மாள் வருகின்றாள்
கள்ளமில்லாத மனதைக் காத்திடவே எங்கள்
நாகம்மாள் வருகின்றாள்
செய்த பாவவினை போக்கிடவே எங்கள்
நாகம்மாள் வருகின்றாள்
பாம்பாக வடிவெடுத்து நாக பூஷணியாக
நாகம்மாள் வருகின்றாள்

## முருகன் பாடல்

வேல் வேல் வேலவனே வேலாயுதா – எங்கள்
வினைகள் எல்லாம் தீர்த்திடுவாய் வேலாயுதா
(வேல் வேல்)

கந்தா கடம்பா வேலாயுதா – எங்கள்
கதிர்காம வேலவனே வேலாயுதா (வேல் வேல்)
திருச்செந்தூர் வேலவனே வேலாயுதா – எங்கள்
திருப்பரங்கித் தீரனே வேலாயுதா (வேல் வேல்)
சோலைமலைக் கிழவனே வேலாயுதா – எங்கள்
சொகுக்சுகார குமரனே வேலாயுதா (வேல் வேல்)
பழனிமலை முருகனே வேலாயுதா – எங்கள்
பல வினையை நீக்கிடுவாய் வேலாயுதா (வேல் வேல்)
சுவாமிமலை நாதனே வேலாயுதா – எங்கள்
சுப்பிரமண்ய சுவாமியே வேலாயுதா (வேல் வேல்)
திருத்தணிகை முருகனே வேலாயுதா – எங்கள்
திருமுருக வேலவனே வேலாயுதா (வேல் வேல்)

காவடியாம் காவடியாம் கந்த வேலவன் காவடி//
காவடியாம் காவடி காண வேண்டும் கண் கோடி//
வேல் முருகன் நாமத்திலே வித விதமாய் காவடி//
வெற்றி வேலன் காவடி வீரவேலன் காவடி//
சிங்கார வேலனுக்கு சின்ன சின்ன காவடி//
சுவாமிமலை நாதனுக்கு சந்தனத்தில் காவடி//
பழனிமலைப் பாலனுக்கு பால் குடத்தால் காவடி//
தென்பழனி வேலனுக்கு தேன் குடத்தால் காவடி//
ஆறுமுக வேலனுக்கு அழகு மயில் காவடி//
வண்ண வண்ண காவடி கந்த வேலன்காவடி//
(காவடியாம்)

சுப்ரமண்யம் சுப்ரமண்யம்
சண்முகநாதா சுப்ரமண்யம்
சுப்ரமண்யம் சுப்ரமண்யம்
சண்முகநாதா சுப்ரமண்யம்
ஹர ஹர ஹர ஹர சுப்ரமண்யம்
சிவ சிவ ஹர ஹர சுப்ரமண்யம்
ஹர ஹர சிவ சிவ சுப்ரமண்யம்
சிவ சரவணபவ சுப்ரமண்யம்
குரு சரவணபவ சுப்ரமண்யம்
சிவ சிவ ஹர ஹர சுப்ரமண்யம்
ஹர ஹர சிவ சிவ சுப்ரமண்யம்

அன்பருக்கு அன்பனே நீ வா வா முருகா
ஆறுபடை வீடுடையாய் நீ வா வா முருகா
இன்பமய ஜோதியே நீ வா வா முருகா
ஈசனுமை பாலகனே நீ வா வா முருகா
உலகநாதன் மருகனே நீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே நீ வா வா முருகா
எட்டுக்குடி வேலவனே நீ வா வா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வா வா முருகா
ஐங்கரனுக் கிளையவனே நீ வா வா முருகா
ஒய்யாரி வள்ளி லோலோ நீ வா வா முருகா
ஓங்கார தத்துவமே நீ வா வா முருகா
ஔவைக் குபதே சித்தவா நீ வா வா முருகா
அகில லோக நாயகனே நீ வா வா முருகா
ஹரக ரோகரா சாமி ஹரக ரோகரா
ஹரக ரோகரா சாமி ஹரக ரோகரா

## துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதியணி சூலினி
மன்மத பாணியளே;
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே;
கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல்
கற்பகக் காமினியே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாஷி !

கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக்
காத்திட வந்திடுவாள்;
தானுறு தவஒளி தாரொளி மதியொளி
தாங்கியே வீசிடுவாள்;
மானுறு விழியாள் மாதவர் மொழியாள்;
மாலைகள் சூடிடுவாள்;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாஷி !

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே;
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே;
எங்குலந் தழைத்திட எழில்வடி வுடனே
எழுந்தநல் துர்க்கையளே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாஷி !

தண தண தந்தண தவிலொலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்;
கண கண கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்;
பணபண பம்பண பறையொலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாஷி !

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே;
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேலனைக்
கொடுத்தநல் குமரியளே;
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற்
சக்தியெ னும்மாயே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாஷி !

எண்ணிய படிநீ யருளிட வருவாய்
எங்குல தேவியளே;
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்;
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாஷி !

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
யென்றுநீ சொல்லிடுவாய்;
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச்
சுகமதைத் தந்திடுவாய்;
படர்தரு இருளில் பாதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய்;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாஷி !

ஜெய ஜெய பாலா சாமுண்டேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீ தேவி;
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீ பரமேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீ தேவி
ஜெய ஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெய ஜெய ஸ்ரீ தேவி
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாஷி !

## ஸ்ரீ துர்க்கா அஷ்டகம்

இன்பநலன் அளிப்பவளை
இனியனவே தருபவளை
அன்புடைய அன்னையவளை
அருஞ்சிவனை மணந்தவளை
என்னுடைய இதயத்தே
பொன்னுயிராய் இருப்பவளை
நன்மலரால் பூசித்தே
நமோ துர்க்கா யென்றிடுவேன் !

துங்கவெழிற் கரிமுகனைத்
துர்க்கைநீ யீன்றெடுத்தாய்;
சங்கரனார் தாண்டவத்தில்
சக்தியேநீ பங்கெடுத்தாய்
பொங்குசினப் பேரரியில்;
பொருந்தநீ யிருந்திட்டாய்
தங்கிடுவாய் எங்குலத்தில்;
தவஒளியே துர்க்கையளே !

இசைதந்து இல்வாழ்வின்
இடர்நீக்கிக் காப்பவளே
விசையுடனே மணமாலை
விருப்பமொடு அளிப்பவளே,
திசையெல்லாம் திருவிளங்கத்
திருவடியால் நடந்தவளே,
அசைவற்ற பொருளதையும்
ஆட்சி செய்வாய் துர்க்கையளே!

வேண்டியன விரும்பியன
வேண்டியவா றளித்திடுவாள்
காண்டிபத்தைக் கதையதனைக்
காந்திமுகு சூலமதை
ஆண்டருளும் அன்னையவள்
ஆட்சிசெய்ய ஏந்திட்டாள்;
தூண்டாநல் மணிவிளக்கைத்
தூயதுர்க்கைத் தாயென்போம் !

உலகையிவள் ஈன்றெடுத்தாள்
உடைமைமிகத் தானளித்தாள்;
கலகமிடும் கள்ளாக்கக்
கவிமாய்த்துக் கவியிசைத்தாள்;
திலகஒளி நுதலுடையாள்
திருநிறைந்த வடிவுடையாள்;
அலகில்நலம் அளிப்பவளை
அன்னை ஸ்ரீதுர்க் கையென்போம் !

சுந்தரத்துக் கந்தனையே
சுடர்கூட்டி ஈன்றவளார்?
விந்தைமிகப் பொங்கிடவே
விளங்குநலம் தருபவளார்?
அந்தமொடு ஆதியின்றி
அன்னையென வளர்ந்தவளார்?
சந்தமிகப் பொலிகின்ற
சக்திஸ்ரீதுர்க் கையென்போம் !

செல்வமொடு செல்வாக்கைச்
செயம்பெறவே தந்தவளை,
நல்லறிவும் நல்லொளியும்
நல்லனவும் நிறைந்தவளை,
வெல்லுகின்ற வழியாளை
செஞ்சுடரின் விழியாளைச்
சொல்மலரால் பூசித்துச்
சொர்ணஒளி பெற்றிடுவோம்!

குமரிமுனை நிற்கின்ற
குலவிளக்கே துர்க்கையளே !
சமயமதில் வழிகாட்டும்
சண்டிகையே துர்க்கையளே !
சமரிட்டு சங்கடத்தைச்
சங்கரித்த துர்க்கையளே !
இமயமுகில் துர்க்கையளே;
இணையடிகள் வாழியவே !

# ராகு கால துர்க்கா அஷ்டகம்

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்கு மானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தவள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீங்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே !

உலகை யீன்றவள் துர்க்கா உமையு மானவள்
உண்மை யானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நிந்தையானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே !

செம்மையானவள் துர்க்கா செபமுமானவள்
அம்மையானவள் அன்புத் தந்தையானவள்
இம்மையானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே !

உயிருமானவள் துர்க்கா உடலுமானவள்
உலகமானவள் எந்தன் உடைமையானவள்
பயிருமானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே !

துன்பமற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையுமானவள் இன்பத் தோணி யானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தாங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே !

குருவுமானவள் துர்க்கா குழந்தையானவள்
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவுமானவள் துர்க்கா திருசூலியானவள்
திருநீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே !

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் அன்னை தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே !

கன்னி துர்க்கையே இதயக்கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக் கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே !

## ரோக நிவாரண அஷ்டகம்

பகவதி தேவி பர்வத தேவி
பலமிகு தேவி துர்க்கையளே
ஜெகமது யாவும் ஜெய ஜெய வெனவே
சங்கரி யுன்னைப் பாடிடுமே
ஹந ஹந தகதக பசபச வென்வே
தளிர்த்திடு ஜோதி யானவளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

தண்டினி தேவி தக்ஷிணி தேவி
கட்கினி தேவி துர்க்கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடன ஈஸ்வரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
முனிவர்கள் தேவி மணித்தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க்கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான்விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க்கையளே
ஊரணி மாயே ஊற்று தாயே
ஊர்த்துவ யாயே ஊர்ஒளியே
காரணி மாயே காருணி தாயே
கானக யாயே காசினியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

திருமக ளானாய் கலைமக ளானாய்
மலைமக ளானாய் துர்க்கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி யானாய் பெண்மயிலே
நறுமல ரானாய் நல்லவ ளானாய்
நந்தினி யானாய் நங்கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க்கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாயகியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாயவளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

கோவுறை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க்கையளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூரணையே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

ஜெய ஜெய சைல புத்திரி ப்ரஹ்ம
சாரிணி சந்த்ர கண்டினியே
ஜெய ஜெய கூஷ் மாண்டினி ஸ்கந்த
மாதினி காத்யா யன்யயளே
ஜெய ஜெய கால ராத்திரி கௌரி
ஸித்திதா ஸ்ரீநவ துர்க்கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

## ஸ்ரீ கருமாரியம்மன் ஸ்தோத்திரம்

கற்பூரநாயகியே கனகவல்லி
காளி மகமாயி கருமாரியம்மா !
பொற்கோவில் கொண்டசிவ கருமாரியம்மா !
பூவிருந்த வல்லிதெய்வ யானையம்மா !
விற்கோல வேதவல்லி விசாலாட்சி !
விழிக்கோல மாமதுரை மீனாட்சி !
பொற்கோவில் தானமைத்தேன் இங்குதாயே
சுடராக வாழ்விப்பாய் என்னைநீயே (கற்பூர)

புவனமுழு தாளுகின்ற புவனேஸ்வரி !
புரமெரித்தோன் புளமிருக்கும் பரமேஸ்வரி !
நவநவமாய் வடிவாகு மகேஸ்வரி !
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி !
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி !
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி !
உன்னடிமைச் சிறியோனை நீயாதரி (கற்பூர)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறுஎந்த
உறைவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ – அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவா அம்மா!
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா!
சின்னவனின் குரல்கேட்டுன் முகந்திருப்பு!
சிரித்தபடி என்னைத்தினம் வழிஅனுப்பு! (கற்பூர)

கண்ணிரண்டும் உன்னுருவே காண வேண்டும்
காலிரண்டும் உன்னையே நாடவேண்டும்
பண்ணமைக்கும் நாஉனையே பாடவேண்டும்
பக்தியோடு கையுனையே கூடவேண்டும்
எண்ணமெல்லாம் உன்நினைவே ஆக வேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடைய தாகவேண்டும்
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா!
மகனுடைய குறைகளை நீ தீருமம்மா! (கற்பூர)

நெற்றியினுள் குங்குமமே நிறைய வேண்டும்
நெஞ்சினிலும் திருநாமம் வழியவேண்டும்
கற்றதெல்லாம் மென்மேலும் பெருக வேண்டும்
கவிதையிலே உன் நாமம் வாழவேண்டும்
சுற்றமெலாம்நீடுழீ வாழ வேண்டும்
ஜோதியிலே நீயிருந்து ஆளவேண்டும்
மற்றதெல்லாம் நானுனக்குச் சொல்லலாமா!
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா! (கற்பூர)

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ!
அருள்செய்ய இந்நேரம் ஆவதுண்டோ!
கண்ணுக்கு இமையின்றிக் காவலுண்டோ!
கன்றுக்கு பசுவின்றி சொந்தமுண்டோ!
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ!
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ!
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ!
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ! (கற்பூர)

அன்புக்கே நானடிமை ஆகவேண்டும்
அறிவுக்கே என்காது கேட்க வேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்
வஞ்சத்தை என்நெஞ்சம் அறுக்கவேண்டும்
பண்புக்கே உயிர்வாழ ஆசைவேண்டும்
பரிவுக்கே நான்என்றும் பணியவேண்டும்
என்பக்கம் இவையெல்லாம் இருக்க வேண்டும்
என்னோடு நீஎன்றும் வாழவேண்டும் (கற்பூர)

கும்பிடவோ கையிரண்டு போதவில்லை!
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை!
நம்பிடவோ மெய்யதனில் சக்தியில்லை!
நடத்திடவோ காலிரண்டால் ஆகவில்லை !
செம்பவழ வாயழகி! உன்னெழிலோ
சின்னஇரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவில்லை (கற்பூர)

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்!
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகி பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னை
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை(கற்பூர)

## ஸ்ரீ காளியம்மன் அருள்மாலை

கந்தவீர மாகாளி கமல மங்கலை
கருணையான வடிவழகி கனிந்து நின்றனை
விந்தையாகி விளக்குமாகி விளங்கி வந்தனை
விண்ணுமாகி மண்ணுமாகி வெற்றிகண்டனை
மந்தமான புத்தியோட்டி மணமும் தந்தனை
மலரில்வேதன் உன்னைப்பாட மயக்கம் தீர்த்தனை
சொந்தமான காளியம்மா இந்த நாள்முதல்
எந்தனோடு வாழ்வளிக்க என்றும் தங்குவாய்!

நந்தவீர மாகாளி நயன மாலினி
நம்பிவந்த எம்மிடையே நலனும் காட்டுவாய்
இந்த வாழ்வில் உன்னையன்றி இங்கு யாருளார்
இன்றுநல்ல காலைவந்து இனிமை கூட்டுவாய்
மந்தையாடு போல வாழ்வில் மயங்கி நில்லாமல்
முத்தியொடு செல்வபோகம் முழுவதும் நாடுவாய்
சொந்தமான காளியம்மா இந்த நாள்முதல்
எந்தனோடு வாழ்வளிக்க என்றும் தங்குவாய்!

பொங்குவீர மாகாளி பொய்மை தீர்மணி
பொறுமையோடு பெருமையாகிப் பொருளும் கூட்டினாய்
எந்தையான சிவனைத்தூது எடுத்து அனுப்பினாய்
எழிலாகி எண்ணமாகி என்னுள் ஆடினாய்
பந்தனைந்த விலரி நீயும் பகைமை என்றதும்
பரந்து வந்து படைகளோட்டில் பசுமை காட்டினாய்
சொந்தமான காளியம்மா இந்த நாள்முதல்
எந்தனோடு வாழ்வளிக்க என்றும் தங்குவாய்!

ஆதிசக்தி சோதிசக்தி ஆளவந்த சக்தியே
ஆகமங்கள் ஆனசக்தி ஆத்மசோதி சக்தியே
நீதிசக்தி நித்யசக்தி நீறுபூசும் சக்தியே
நீலிசக்தி நிருத்தசக்தி நீலமேனி சக்தியே
காதிசக்தி கானசக்தி காணுமின்ப சக்தியே
காளிசக்தி காயசக்தி காட்சிதந்த சக்தியே
வீரசக்தி தீரசக்தி வீடுகாக்கும் சக்தியே
சூரசக்தி சூலிசக்தி சூழும்சக்தி சக்தியே.

## ஸ்ரீ காளி ஸ்தோத்ரம்

யாது மாகி நின்றாய் – காளி
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் – நின்றன்
செயல்க ளன்றி யில்லை
போதும் இங்கு மாந்தர் – வாழும்
பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதி சக்தி, தாயே! என்மீ
தருள் புரிந்து காப்பாய் ! (யாது)

எந்த நாளும் நின்மேல் – தாயே!
இசைகள் பாடி வாழ்வேன் !
கந்த னைப்ப யந்தாய் – தாயே!
கருணை வெள்ள மானாய்!
மந்த மாருதத்தில் – வானில்
மலையி னுச்சி மீதில்,
சிந்தை யெங்கு செல்லும் – அங்குன்
செம்மை தோன்று மன்றே!

## ஸ்ரீ பராசக்தி கீர்த்தனைகள்

சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்
சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்

சத்தியஞான தர்மசக்தி சாந்தசக்தி ஓம்சிவம்
சச்சிதானந் தாத்மசக்தி சர்வசக்தி ஓம்சிவம் (சுத்தசக்தி)

வேதசாஸ்த்ர சகலகலா வித்யாசக்தி ஓம்சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம்சிவம் (சுத்தசக்தி)

நாககீத கானகலா நடனசக்தி ஓம்சிவம்
மஹாமந்த்ர யந்த்ர – தந்த்ர வச்யசக்தி ஓம்சிவம் (சுத்தசக்தி)

யோகபோக த்யாகசக்தி லோகசக்தி ஓம்சிவம்
தாகமோஹ சோகரஹித தபோசக்தி ஓம்சிவம் (சுத்தசக்தி)

துஷ்டசத்ரு நாகசக்தி துர்க்காசக்தி ஓம்சிவம்
அஷ்டலக்ஷ்மி ஞானவாணி அமரசக்தி ஓம்சிவம் (சுத்தசக்தி)
குஞ்சிதபத அபயஹஸ்த வாஞ்சிதபல தாயகம்
குருபரசிவ ஹரஹர நடராஜ சுத்த சக்தி ஓம் (சுத்தசக்தி)

ஜய ஜய ஜய சக்தி – ஓம் ஸ்ரீ ஜய ஜய ஜய சக்தி
ஜய ஜய வென தினம் பாடிப் பணிந்தோம்
ஜகம் எங்கும் அமைதியைத் தா – ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் மறைய – அம்மம்மா
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை – ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி பலமருள்வாய் – அம்மம்மா
கரம் குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் – ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

காசினியெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் – அம்மம்மா
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுடன் அடைக்கலம் நான் – ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து – அம்மம்மா
நமஸ்காரம் செய்து ஆரதி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா – ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்கா தேவி சரணம் (ஜெய ஜெய தேவி)
துர்க்கை அம்மனைத் துதித்தால் – என்றும்
துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயும் அவளை
தரிசணம் கண்டால் போதும்
கர்ம வினைகளும் ஓடும்
சர்வ மங்களம் கூடும். (ஜெய ஜெய தேவி)

பொற்கரங்கள் பதினெட்டு – நம்மைச்
சுற்றி வரும் பகை விரட்டும்
நெற்றியிலே குங்குமப் பொட்டும்
வெற்றிப்பாதையைக் காட்டும்
ஆயிரம் கண்கள் உடையவளே
ஆதி சக்தி அவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே
தாய் போல் நம்மைக் காப்பவளே (ஜெய ஜெய தேவி)
சங்கு சக்கரம் வில்லும் அம்பும்
மின்னும் வாளும் வேலும் சூலமும்
தங்கக் கைகளில் தாங்கி நிற்பாள்
சிங்கத்தின் மேலவள் வீற்றிருப்பாள்
திங்களை முடிமேல் சூடி நின்றாள்
மங்கள வாழ்வும் தந்திடுவாள்
மங்கையற் கரசியும் அவளே
அங்கயற் கன்னியும் அவளே (ஜெய ஜெய தேவி)
கனக துர்க்கா தேவி சரணம்
கனக துர்க்கா தேவி சரணம்
கனக துர்க்கா தேவி சரணம்

## ஸ்ரீ லலிதா த்ரிசதீ நாமாவளி

1. ஓம் ககாரரூபாயை நம :
2. ஓம் கல்யாண்யை நம :
3. ஓம் கல்யாண குணசாலின்யை நம :
4. ஓம் கல்யாண சைல நிலயாயை நம :
5. ஓம் கமனீயாயை நம :
6. ஓம் கலாவத்யை நம :
7. ஓம் கமலாக்ஷ்யை நம :
8. ஓம் கல்மஷக்ன்யை நம :
9. ஓம் கருணாம்ருத ஸாகராயை நம :
10. ஓம் கதம்ப கானனாவாஸாயை நம :
11. ஓம் கதம்ப குஸுமப்ரியாயை நம :
12. ஓம் கந்தர்ப்ப வித்யாயை நம :
13. ஓம் கந்தர்ப்ப ஜனகாபாங்க வீக்ஷணாயை நம :
14. ஓம் கர்ப்பூரவீடி ஸௌரப்ய கல்லோலித ககுப்தடாயை நம :
15. ஓம் கலிதோஷ ஹராயை நம :
16. ஓம் கஞ்ஜ லோசனாயை நம :
17. ஓம் கம்ர விக்ரஹாயை நம :
18. ஓம் கர்மாதி ஸாக்ஷிண்யை நம :
19. ஓம் காரயித்ர்யை நம :
20. ஓம் கர்மபலப்ரதாயை நம :
21. ஓம் ஏகார ரூபாயை நம :
22. ஓம் ஏகாக்ஷர்யை நம :
23. ஓம் ஏகானேகாக்ஷரா க்ருத்யை நம :
24. ஓம் ஏதத் ததித் யநிர்தேச்யாயை நம :
25. ஓம் ஏகானந்த சிதாக்ருத்யை நம :
26. ஓம் ஏவமித் யாகமா போத்யாயை நம :
27. ஓம் ஏகபக்தி மதர்ச்சிதாயை நம :
28. ஓம் ஏகாக்ர சித்த நிர்த்யாதாயை நம :
29. ஓம் ஏஷணாரஹிதா த்ருதாயை நம :
30. ஓம் ஏலாஸுகந்தி சிகுராயை நம :
31. ஓம் ஏன : கூட விநாசின்யை நம :
32. ஓம் ஏகபோகாயை நம :
33. ஓம் ஏகரஸாயை நம :
34. ஓம் ஏகைச்வர்ய ப்ரதாயின்யை நம :
35. ஓம் ஏகாதபத்ர ஸாம்ராஜ்ய ப்ரதாயை நம :
36. ஓம் ஏகாந்த பூஜிதாயை நம :

37. ஓம் ஏதமான ப்ரபாயை நம :
38. ஓம் ஏஜதனேஜஜ் ஜகதீச்வர்யை நம :
39. ஓம் ஏகவீராதி ஸம்ஸேவ்யாயை நம :
40. ஓம் ஏகப்ராபவ சாலின்யை நம :
41. ஓம் ஈகார ரூபாயை நம :
42. ஓம் ஈசித்ர்யை நம :
43. ஓம் ஈப்ஸிதார்த்த ப்ரதாயின்யை நம :
44. ஓம் ஈத்ருதித் யவிநிர்தேச்யாயை நம :
45. ஓம் ஈச்வரத்வ விதாயின்யை நம :
46. ஓம் ஈசானாதி ப்ரஹ்மமய்யை நம :
47. ஓம் ஈசித்வாத்யஷ்ட ஸித்திதாயை நம :
48. ஓம் ஈக்ஷித்ர்யை நம :
49. ஓம் ஈக்ஷணஸ்ருஷ்டாண்ட கோட்யை நம :
50. ஓம் ஈச்வர வல்லபாயை நம :
51. ஓம் ஈடிதாயை நம :
52. ஓம் ஈவரார்த்தாங்க சரீராயை நம :
53. ஓம் ஈசாதி தேவ தாயை நம :
54. ஓம் ஈச்வர ப்ரேரண கர்யை நம :
55. ஓம் ஈசதாண்டவ ஸாக்ஷிண்யை நம :
56. ஓம் ஈவரோத்ஸங்க நிலயாயை நம :
57. ஓம் ஈதிபாதா விநாசின்யை நம :
58. ஓம் ஈஹாவிரஹிதாயை நம :
59. ஓம் ஈச சக்த்யை நம :
60. ஓம் ஈஷத் ஸ்மிதானனாயை நம :
61. ஓம் லகார ரூபாயை நம :
62. ஓம் லலிதாயை நம :
63. ஓம் லக்ஷ்மீ வாணீ நிஷேவிதாயை நம :
64. ஓம் லாகிண்யை நம :
65. ஓம் லலனா ரூபாயை நம :
66. ஓம் லஸத் தாடிம பாடலாயை நம :
67. ஓம் லலந்திகா லஸத் பாலாயை நம :
68. ஓம் லலாட நயனார்ச்சிதாயை நம :
69. ஓம் லக்ஷணோஜ்வல திவ்யாங்க்யை நம :
70. ஓம் லக்ஷகோட்யண்ட நாயிகாயை நம :
71. ஓம் லக்ஷ்யார்த்தாயை நம :
72. ஓம் லக்ஷணாகம்யாயை நம :
73. ஓம் லப்தகாமாயை நம :
74. ஓம் லதாதனவே நம :

75. ஓம் லலாம ராஜதலிகாயை நம :
76. ஓம் லம்பி முக்தா லதாஞ்சிதாயை நம :
77. ஓம் லம்போதர ப்ரஸவே நம :
78.. ஓம் லப்யாயை நம :
79. ஓம் லஜ்ஜாட்யாயை நம :
80. ஓம் லயவர்ஜிதாயை நம :
81. ஓம் ஹ்ரீங்கார ரூபாயை நம :
82. ஓம் ஹ்ரீங்கார நிலயாயை நம :
83. ஓம் ஹ்ரீம்பத ப்ரியாயை நம :
84. ஓம் ஹ்ரீங்கார பீஜாயை நம :
85. ஓம் ஹ்ரீங்கார மந்த்ராயை நம :
86. ஓம் ஹ்ரீங்கார லக்ஷணாயை நம :
87. ஓம் ஹ்ரீங்கார ஜப ஸுப்ரீதாயை நம :
88. ஓம் ஹ்ரீம் மத்யை நம :
89. ஓம் ஹ்ரீம் விபூஷணாயை நம :
90. ஓம் ஹ்ரீம் சீலாயை நம :
91. ஓம் ஹ்ரீம் பதாராத்யாயை நம :
92. ஓம் ஹ்ரீம் கர்பாயை நம :
93. ஓம் ஹ்ரீம் பதாபிதாயை நம :
94. ஓம் ஹ்ரீங்கார வாச்யாயை நம :
95. ஓம் ஹ்ரீங்கார பூஜ்யாயை நம :
96. ஓம் ஹ்ரீங்கார பீடிகாயை நம :
97. ஓம் ஹ்ரீங்கார வேத்யாயை நம :
98. ஓம் ஹ்ரீங்கார சிந்த்யாயை நம :
99. ஓம் ஹ்ரீம் நம :
100. ஓம் ஹ்ரீம் சரீரிண்யை நம :
101. ஓம் ஹகார ரூபாயை நம :
102. ஓம் ஹலத்ருத் பூஜிதாயை நம :
103. ஓம் ஹரிணேக்ஷணாயை நம :
104. ஓம் ஹரப்ரியாயை நம :
105. ஓம் ஹாராராத்யாயை நம :
106. ஓம் ஹரிப்ரஹ்மேந்த்ர வந்திதாயை நம :
107. ஓம் ஹயாரூடா ஸேவதாங்க்ரீயை நம :
108. ஓம் ஹயமேத ஸமர்ச்சிதாயை நம :
109. ஓம் ஹர்யக்ஷ வாஹனாயை நம :
110. ஓம் ஹம்ஸ வாஹனாயை நம :
111. ஓம் ஹத தானவாயை நம :
112. ஓம் ஹத்யாதி பாபசமன்யை நம :

113. ஓம் ஹரிதச்வாதி ஸேவிதாயை நம :
114. ஓம் ஹஸ்தி கும்போத்துங்க குசாயை நம :
115. ஓம் ஹதிக்ருத்தி ப்ரியாங்கனாயை நம :
116. ஓம் ஹரித்ரா குங்குமாதிக்தாயை நம :
117. ஓம் ஹர்யச்வாத்யமரார்ச்சிதாயை நம :
118. ஓம் ஹரிகேச ஸக்யை நம :
119. ஓம் ஹாதி வித்யாயை நம :
120. ஓம் ஹாலாமதாலஸாயை நம :
121. ஓம் ஸகார ரூபாயை நம :
122. ஓம் ஸர்வக்ஞாயை நம :
123. ஓம் ஸர்வேச்யை நம :
124. ஓம் ஸர்வமங்களாயை நம :
125. ஓம் ஸர்வகர்த்ரீயை நம :
126. ஓம் ஸர்வ பர்த்ர்யை நம :
127. ஓம் ஸர்வஹந்தீர்யை நம :
128. ஓம் ஸநாதனாயை நம :
129. ஓம் ஸர்வானவத்யாயை நம :
130. ஓம் ஸர்வாங்க ஸுந்தர்யை நம :
131. ஓம் ஸர்வ ஸாக்ஷிண்யை நம :
132. ஓம் ஸர்வாத்மிகாயை நம :
133. ஓம் ஸர்வ ஸௌக்யதாத்ர்யை நம :
134. ஓம் ஸர்வ விமோஹின்யை நம :
135. ஓம் ஸர்வாதாராயை நம :
136. ஓம் ஸர்வகதாயை நம :
137. ஓம் ஸர்வாவகுண வர்வாலகுண வர்ஜிதாயை நம :
138. ஓம் ஸர்வாருணாயை நம :
139. ஓம் ஸர்வமாத்ரே நம :
140. ஓம் ஸர்வ பூஷண பூஷிதாயை நம :
141. ஓம் ககாரார்த்தாயை நம :
142. ஓம் காலஹந்த்ர்யை நம :
143. ஓம் காமேச்யை நம :
144. ஓம் காமிதார்த்ததாயை நம :
145. ஓம் காமஸஞ்ஜீவன்யை நம :
146. ஓம் கல்யாயை நம :
147. ஓம் கடினஸ்தன மண்டலாயை நம :
148. ஓம் கரபோரவே நம :
149. ஓம் கலாநாத முக்யை நம :
150. ஓம் கச ஜிதாம்புதாயை நம :

151. ஓம் கடாக்ஷஸ்யந்தி கருணாயை நம :

152. ஓம் கபாலி ப்ராண நாயிகாயை நம :

153. ஓம் காருண்ய விக்ரஹாயை நம :

154. ஓம் காந்தாயை நம :

155. ஓம் காந்திதூத ஜபாவல்யை நம :

156. ஓம் கலாலாபாயை நம :

157. ஓம் கம்பு கண்ட்யை நம :

158. ஓம் கரநிர்ஜித பல்லவாயை நம :

159. ஓம் கம்பவல்லீ ஸம புஜாயை நம :

160. ஓம் கஸ்தூரி திலகாஞ்சிதாயை நம :

161. ஓம் ஹகாரார்த்தாயை நம :

162. ஓம் ஹம்ஸகத்யை நம :

163. ஓம் ஹாடகாபரணோஜ்வலாயை நம :

164. ஓம் ஹாரஹாரி குசாபோகாயை நம :

165. ஓம் ஹாகின்யை நம :

166. ஓம் ஹல்யவர்ஜிதாயை நம :

167. ஓம் ஹரித்பதிஸ மாராத்யாயை நம :

168. ஓம் ஹடாத்கார ஹதாஸுராய நம :

169. ஓம் ஹர்ஷப்ரதாயை நம :

170. ஓம் ஹவிர் போக்த்ர்யை நம :

171. ஓம் ஹார்த ஸந்தமஸாபஹாயை நம :

172. ஓம் ஹல்லீஸ லாஸ்ய ஸந்துஷ்டாயை நம :

173. ஓம் ஹம்ஸ மந்த்ரார்த்த ரூபிண்யை நம :

174. ஓம் ஹானோபாதான நிர்முக்தாயை நம :

175. ஓம் ஹர்ஷிண்யை நம :

176. ஓம் ஹரி ஸோதர்யை நம :

177. ஓம் ஹாஹா ஹூஹூ முக ஸ்துத்யாயை நம :

178. ஓம் ஹாநி வ்ருத்தி விவர்ஜிதாயை நம :

179. ஓம் ஹய்யங்கவீன ஹ்ருதயாயை நம :

180. ஓம் ஹரிகோபாருணாம்சுகாயை நம :

181. ஓம் லகாராக்யாயை நம :

182. ஓம் லதா பூஜ்யாயை நம :

183. ஓம் லய ஸ்தித் யுத்பவேச்வர்யை நம :

184. ஓம் லாஸ்யதர்சன ஸந்துஷ்டாயை நம :

185. ஓம் லாபாலாப விலர்ஜிதாயை நம :

186. ஓம் லங்க்யேதராக்ஞாயை நம :

187. ஓம் லாவண்ய சாலின்யை நம :

188. ஓம் லகு ஸித்திதாயை நம :

189. ஓம் லாக்ஷாரஸ ஸவர்ணாபாயை நம :
190. ஓம் லக்ஷ்மணாக்ரஜ பூஜிதாயை நம :
191. ஓம் லப்யேதராயை நம :
192. ஓம் லப்தபக்தி ஸுலபாயை நம :
193. ஓம் லாங்கலாயுதாயை நம :
194. ஓம் லக்ன சாமர ஹஸ்த ஸ்ரீசாரதா பரிவீஜிதாயை நம :
195. ஓம் லஜ்ஜாபத ஸமாராத்யாயை நம :
196. ஓம் லம்படாயை நம :
197. ஓம் லகுலேச்வர்யை நம :
198. ஓம் லப்த மானாயை நம :
199. ஓம் லப்த ரஸாயை நம :
200. ஓம் லப்த ஸம்பத் ஸமுன்னத்யை நம :
201. ஓம் ஹ்ரீங்காரிண்யை நம :
202. ஓம் ஸ்ரீங்காராத்யாயை நம :
203. ஓம் ஹ்ரீம் மத்யாயை நம :
204. ஓம் ஹ்ரீம் சிகாமணயே நம :
205. ஓம் ஹ்ரீங்கார குண்டாக்னி சிகாயை நம :
206. ஓம் ஹ்ரீங்கார சசி சந்த்ரிகாயை நம :
207. ஓம் ஹ்ரீங்கார பாஸ்கர ருசயே நம :
208. ஓம் ஹ்ரீங்காராம்போத சஞ்சலாயை நம :
209. ஓம் ஹ்ரீங்கார கந்தாங்குரிகாயை நம :
210. ஓம் ஹ்ரீங்காரைக பராயணாயை நம :
211. ஓம் ஹ்ரீங்கார தீர்க்கிகா ஹம்ஸ்யை நம :
212. ஓம் ஹ்ரீங்காரோத்யான கேகின்யை நம :
213. ஓம் ஹ்ரீங்காராரண்ய ஹரிண்யை நம :
214. ஓம் ஹ்ரீங்காராவால வல்லர்யை நம :
215. ஓம் ஹ்ரீங்காரா பஞ்ஜர சுக்யை நம :
216. ஓம் ஹ்ரீங்காராங்கண தீபிகாயை நம :
217. ஓம் ஹ்ரீங்கார கந்தரா ஹிம்ஹ்யை நம :
218. ஓம் ஹ்ரீங்காரம்போஜ ப்ருங்கிகாயை நம :
219. ஓம் ஹ்ரீங்கார ஸுமனோ மாத்வ்யை நம :
220. ஓம் ஹ்ரீங்கார தரு மஞ்ஜர்யை நம :
221. ஓம் ஸகாராக்யாயை நம :
222. ஓம் ஸமரஸாயை நம :
223. ஓம் ஸகலாகம ஸம்ஸ்துதாயை நம :
224. ஓம் ஸர்வ வேதாந்த தாத்பர்ய பூம்யை நம :
225. ஓம் ஸதஸதாச்ரயாயை நம :
226. ஓம் ஸகலாயை நம :

227. ஓம் ஸச்சிதானந்தாயை நம :
228. ஓம் ஸாத்யாயை நம :
229. ஓம் ஸத்கதி தாயின்யை நம :
230. ஓம் ஸநகாதி முனி த்யேயாயை நம :
231. ஓம் ஸதாசிவ குடும்பின்யை நம :
232. ஓம் ஸகலாதிஷ்டான ரூபாயை நம :
233. ஓம் ஸத்யரூபாயை நம :
234. ஓம் ஸமாக்ருத்யை நம :
235. ஓம் ஸர்வ ப்ரபஞ்ச நிர்மாத்ர்யை நம :
236. ஓம் ஸமானாதிக வர்ஜிதாயை நம :
237. ஓம் ஸர்வோத்துங்காயை நம :
238. ஓம் ஸங்க ஹீனாயை நம :
239. ஓம் ஸகுணாயை நம :
240. ஓம் ஸகலேஷ்டதாயை நம :
241. ஓம் ககாரிண்யை நம :
242. ஓம் காவ்யலோலாயை நம :
243. ஓம் காமேச்வர மனோஹராயை நம :
244. ஓம் காமேச்வர ப்ராணநாட்யை நம :
245. ஓம் காமேசோத்ஸங்க வாஸின்யை நம :
246. ஓம் காமேச்வராலிங்கிதாங்க்யை நம :
247. ஓம் காமேச்வர ஸுகப்ரதாயை நம :
248. ஓம் காமேச்வர ப்ரணயின்யை நம :
249. ஓம் காமேச்வர தப; ஸித்யை நம :
250. ஓம் காமேச்வர விலாஸின்யை நம :
251. ஓம் காமேச்வர மன: ப்ரியாயை நம :
252. ஓம் காமேச்வர ப்ராண நாதாயை நம :
253. ஓம் காமேச்வர விமோஹின்யை நம :
254. ஓம் காமேச்வர ப்ரஹ்ம வித்யாயை நம :
255. ஓம் காமேச்வர க்ருஹேச்வர்யை நம :
256. ஓம் காமேச்வர ஹ்லாதகர்யை நம :
257. ஓம் காமேச்வர மஹேச்வர்யை நம :
258. ஓம் காமேச்வர்யை நம :
259. ஓம் காமகோடி நிலயாயை நம :
260. ஓம் காங்க்ஷிதார்த்ததாயை நம :
261. ஓம் லகாரிண்யை நம :
262. ஓம் லப்த ரூபாயை நம :
263. ஓம் லப்த தியே நம :
264. ஓம் லப்த வாஞ்சிதாயை நம :

265. ஓம் லப்த பாப மனோதூராயை நம :
266. ஓம் லப்தாஹங்கார துர்கமாயை நம :
267. ஓம் லப்த சக்த்யை நம :
268. ஓம் லப்த தேஹாயை நம :
269. ஓம் லப்தைச்வர்ய ஸமுந்நத்யை நம :
270. ஓம் லப்த வ்ருத்தயே நம :
271. ஓம் லப்த லீலாயை நம :
272. ஓம் லப்த யௌவன சாலின்யை நம :
273. ஓம் லப்தாதிசய ஸர்வாங்க ஸௌந்தர்யாயை நம :
274. ஓம் லப்த விப்ரமாயை நம :
275. ஓம் லப்த ராகாயை நம :
276. ஓம் லப்த பத்யை நம :
277. ஓம் லப்த நானாகம் ஸ்தித்யை நம :
278. ஓம் லப்த போகாயை நம :
279. ஓம் லப்த ஸுகாயை நம :
280. ஓம் லப்த ஹர்ஷாபிபூரிதாயை நம :
281. ஓம் ஹ்ரீங்கார மூர்த்தயே நம :
282. ஓம் ஹ்ரீங் ஸௌத ச்ருங்க கபோதிகாயை நம :
283. ஓம் ஹ்ரீங்கார துக்தாப்தி ஸுதாயை நம :
284. ஓம் ஹ்ரீங்கார கமலேந்திராயை நம :
285. ஓம் ஹ்ரீங்கார மணி தீபார்ச்சிஷே நம :
286. ஓம் ஹ்ரீங்கார தரு சாரிகாயை நம :
287. ஓம் ஹ்ரீங்கார பேடக மணயே நம :
288. ஓம் ஹ்ரீங்காராதர்ச பிம்பிதாயை நம :
289. ஓம் ஹ்ரீங்கார கோசாஸி லதாயை நம :
290. ஓம் ஹ்ரீங்காராஸ்தான நர்த்தக்யை நம :
291. ஓம் ஹ்ரீங்கார சுக்திகா முக்தா மணயே நம :
292. ஓம் ஹ்ரீங்கார போதிதாயை நம :
293. ஓம் ஹ்ரீங்காரமய ஸௌவர்ண ஸ்தம்ப வித்ரும புத்ரிகாயை நம :
294. ஓம் ஹ்ரீங்கார வேதோபநிஷதே நம :
295. ஓம் ஹ்ரீங்காராத்வர தக்ஷிணாயை நம :
296. ஓம் ஹ்ரீங்கார நந்தனாராம நவகல்பக வல்லர்யை நம :
297. ஓம் ஹ்ரீங்கார ஹிமவத் கங்காயை நம :
298. ஓம் ஹ்ரீங்காரார்ணவ கௌஸ்துபாயை நம :
299. ஓம் ஹ்ரீங்கார மந்த்ர ஸர்வஸ்வாயை நம :
300. ஓம் ஹ்ரீங்கார பர ஹௌக்யதாயை நம :